MIN ALAI

# மின் அலை

December 2024 | Volume : 12 | Issue 12 | Price Rs. 18.00/- | Ann. Sub. Rs. 216/-




22.12.2024 அன்று ஓட்டல் அஜந்தா, திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டம்



**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

தலைவர்
பொர்.A.அந்தோணிபடோவராஜ்

பொதுச் செயலாளர்
பொர்.V.S.சம்பத்குமார்

பொதுப் பொருளாளர்
பொர்.N.R.செந்தில்



12.12.2024 அன்று சென்னையில் நடைபெற்ற இரத்ததான முகாமை மேலாண்மை இயக்குநர் / மின்தொடரமைப்பு கழகம் திருமதி. K. இந்திராணி அவர்கள் துவங்கிவைத்து இரத்ததானம் அளித்தார்கள்.




12.12.2024 அன்று சென்னையில் நடைபெற்ற இரத்ததான முகாமின் நிறைவாக மருத்துவ குழுவிற்கு நன்றி பாராட்டியும், நினைவு பரிசு வழங்கியும் நிறைவு செய்யப்பட்டது.

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

ஆசிரியர் குழு
பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்

| Page | Contents |
| --- | --- |
| 08 | Our Representations |
| 09, 17 | Board Order |
| 10 | Blood Donation Camps |
| 18 | தலையை நுழைத்தது ஒட்டகம்! |
| 21 | Branch Discussions |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 12 | டிசம்பர் 2024 | இதழ் 12

## தகிக்கும் எரிமலைகள்

அப்பா, யானையை ஏன் கொல்கிறார்கள் அப்பா ?
தந்தத்திற்காக மகனே!
தந்தத்தை எடுத்து என்ன செய்வார்கள் அப்பா ?
தந்தத்தை எடுத்து யானை பொம்மை செய்வார்கள் மகனே!
========

உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், மின்சாரம்—— இன்றைக்கு மக்களின் அடிப்படையான அத்தியாவசியத் தேவைகளாக இருக்கின்றன. இவைகள் எந்த தரத்தில் எந்த அளவுக்கு மக்களுக்கு கைக்கெட்டும் தூரத்தில் இருக்கின்றதோ அந்த சமுதாயமே வளர்ந்த சமுதாயமாக அறியப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் வளர்ந்த சமுதாயத்தின் குறியீடாக மின்சார உற்பத்தியும்/ நுகர்வோர் குறியீடும் காணப்படுகின்றன.

தனியார் நிறுவனங்கள் இலாபத்திற்காக மட்டுமே தொடங்கப்பட்டு நடத்தப்படுவதால் பொதுமக்களுக்கான சேவையில் அவைகளால் ஈடுபடவே முடியாது. அதனால்தான் நமது நாட்டில் மின் உற்பத்தியானது பெரும்பாலும் அரசு சார்ந்த நிறுவனங்களாகவே இருக்கின்றன.

சுதந்திரத்திற்கு முன்பாக இந்தியாவில் ஏற்பட்ட பசி, பட்டினி, பஞ்சம் போன்று சுதந்திர இந்தியாவில் வராமல் தவிர்க்க முடிந்ததற்கு காரணம் விவசாயமும், விவசாய வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்த பொதுத்துறை நிறுவனமான மின்சாரத் துறையுமே ஆகும்.

அதைப்போலவே தொழில்துறையிலும் சிறு குறுந்தொழில் உட்பட கனரக தொழிற்சாலைகள் நமது நாட்டில் வளர்ச்சி பெற்றதற்குக் காரணம் தொழிற்துறைக்குத் தேவையான தரமான மின்சாரத்தை அளித்திட்ட பொதுத்துறையான மின்சாரத்துறையே ஆகும்.

ஆனால் இத்தனை நன்மைகளையும் தாண்டி மின்சாரத் துறையை முழுமையாக தனியாருக்குத் தாரைவார்க்கும் மிக மோசமான சிந்தனையானது, அவ்வப்போது நமது நாட்டில் பல மாநிலங்களிலும் ஏற்பட்டு வருகிறது.

மின்சாரத்துறை தனியார்மயமானால் பொதுமக்கள் மின்சாரத்தை வாங்க முடியாத அளவு மின் கட்டணங்கள் உயரும். மக்கள் மின்சாரத்திடமிருந்து அந்நியப்படுத்தப்படுவார்கள். விவசாயம், சிறு குறுந்தொழில்கள் மின் பற்றாக்குறையால் கடுமையாக பாதிக்கப்படும். நம்முடைய நாடு கற்கால இருண்ட காலத்திற்கு தள்ளப்படும்.

மின்சாரத்துறை தனியார்மயமானால் அது பொதுமக்களை கடுமையாக பாதிக்கும் என்ற நிலைமை அனைவருக்கும் தெரிந்திருந்தாலும் கூட தங்களுக்கு வேறு விதங்களில் நன்மை கிடைக்கும் என்ற அற்ப காரணத்தினால் மின்சாரத் துறையை தனியாருக்குத் தாரை வார்க்க விரும்புகின்றன. தங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்தினால் மட்டுமே அநியாயமான போக்குடன் பொதுமக்களுக்கு துரோகம் விளைவிக்கின்ற நடவடிக்கைகளை அரசுகள் செய்ய முற்படுகின்றன.

அப்போதெல்லாம் மின்வாரிய பணியாளர்கள் இணைந்து நடத்திய வலிமையான போராட்டங்களின் வாயிலாக தனியார் மயமாக்கம் என்பது தடுத்து நிறுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க உள்ள வழிமுறைகளில் ஒன்றான அறவழி போராட்டத்தை தடுக்க / நசுக்கிட மிகவும் கொடுமையான ESMA சட்டங்கள் மூலம் அரசு தன் அதிகார துஷ்பிரயோகம் மூலம் முறியடிக்க முனைவது பிரச்சினைகளுக்கு தீர்வாகாது... அது நீறு பூத்த நெருப்பாக மாற்றும்.

ஜனநாயக வழியில் போராடும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தொழிலாளர்களும் வேறு வழியின்றி மாற்று யுக்திகளை சிந்திக்க வித்திடும்....

அதற்கு எதிர்வினையாக மின்வாரிய பணியாளர்களும் இந்த நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கும் "நேரடி சேவை பாதிப்பு" என்கின்ற வகையிலான போராட்டத்திற்கு இன்னும் செல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் இவைகளை கருத்தில் கொள்ளாமல் பொதுமக்களை மிகக் கடுமையாக பாதிக்கின்ற வகையில் மின்சாரத் துறையை தனியார் மயமாக்க வேண்டும் என்கின்ற வகையில் முரட்டுத்தனமாக அரசுகள் முடிவெடுத்து செயல்படுத்துமேயானால் மின்வாரிய பணியாளர்களும் நேரடியாக தங்கள் போராட்டத்தை கூர்மை படுத்துவார்கள் என்பதை மறுக்க இயலாது; தவிர்க்க இயலாது.

நமது எதிரியே நாம் எந்த ஆயுதத்தை ஏந்த வேண்டும் என்பதை முடிவு செய்கிறார் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். நீதிமன்றங்களும் பல காரணங்களை முன்னிட்டு போராட்டத்திற்கு தடை விதிப்பதால் மேலும் சிக்கலான சூழல் ஏற்படுகிறது... மக்களின் ஓர் அங்கமாக விளங்கும் தொழிலாளிகளின் அடிப்படை உரிமை மறுப்பு ஓர் அடிமை சமூகத்திற்கு வித்திடும். அரசின் அழுத்தங்களுக்கு இணங்காமல் உரிய பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண்பது உரிய தீர்வாகும்.

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே !
வணக்கம்.

வடகிழக்கு பருவமழை காலத்தில் உருவான பெஞ்சல் புயல் காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் மிக அதிக கனமழை பொழிந்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. மிக குறிப்பாக விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர் மாவட்டங்களில் பெய்த மிக அதிக கனமழை காரணமாக பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மாவட்டத்தின் அனேக துணை மின் நிலையங்களும், மின்சாரக் கட்டமைப்புகளும் வெள்ளத்தில் மிதந்தன. மழை நின்று வெள்ள நீர் வடிய துவங்கியதும், துரித கதியில் சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மின்விநியோக கட்டமைப்பை சீர் செய்து அனைவருக்கும் மின்சாரம் வழங்கிட அரும்பணியாற்றிய விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை வட்டங்கள் மற்றும் அருகாமை வட்டங்களிலிருந்து சீரமைப்பு பணிகளில் பங்கு கொண்ட பொறியாளர்கள், பணியாளர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன். பேரிடர் காலமாக இருந்தாலும் இம்முறை சீரமைப்பு நடவடிக்கைகளில் எவ்வித மின்விபத்துகளுமின்றி வலுவான கட்டமைப்பை பராமரித்த பொறியாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். சங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட "Mission Zero Accident" விழிப்புணர்வு பிரசாரம், பணியாளர்களிடத்தில் எச்சரிக்கை உணர்வினை வலுவாக்கியுள்ளதாக எண்ணி மகிழ்கிறேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

உறுப்பினர் நலம் காத்திடும் உரிமைப் போராட்டங்களில் மட்டும் அல்லாது மக்கள் நலனிலும் பொறியாளர் சங்கத்தினை அக்கறை கொள்ளச் செய்து, சமுதாயப் பணிகளிலும் சங்க உறுப்பினர்கள் ஈடுபட வேண்டும் என்ற உள்ளுணர்வை நம்முள் விதைத்து விட்டு மறைந்த, நம் அன்பிற்கினிய முன்னாள் பொதுச்செயலாளர் பொர்.க்ஷி.அசோக்குமார் மற்றும் அவருடன் இணைந்து புகழ் மாலையில் இடம்பெற்ற முன்னாள் விழுப்புரம் மண்டல செயலாளர் பொர்.ஷி.பெரியசாமி மற்றும் முன்னாள் வலைதள செயலாளர் பொர்.ஙி.ரவிச்சந்திரன் ஆகியோரின் நினைவு தினமான டிசம்பர் 12 அன்று தமிழகம் முழுவதும் 28 மையங்களில் நடைபெற்ற இரத்ததான முகாம்களில் 1066 நபர்கள் கலந்து கொண்டு 718 கொடையாளர்கள் ரத்ததானம் வழங்கியுள்ளனர். பெருமழை, வெள்ளம் காரணமாக 10 மையங்களில் அன்று முகாம் நடைபெற இயலவில்லை. பின்னர் சில கிளைகளில் பல்வேறு நாட்களில் இரத்ததான முகாம் நடைபெற்றது. சிறப்பான நிகழ்வாக 24.12.2024 அன்று தஞ்சை கிளையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் 114 நபர்கள் ரத்ததானம் அளித்துள்ளனர். மேலும் 20 நபர்கள் ரத்ததானம் அளிக்க தயாராக இருந்த போதிலும், மருத்துவமனையின் ரத்தத்தினை கையாளும் அன்றாட செயல்திறன் கட்டுபாடுகள் காரணமாக அவர்களிடம் இருந்து ரத்ததானம் பெற்றுக் கொள்ள இயலவில்லை. சிறப்பாக செயல்பட்ட தஞ்சை கிளைப் பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், ரத்ததானம் அளித்தவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் முழுவதும் இதுவரைமையங்களில் நபர்கள் இரத்ததானம் அளித்துள்ளனர். இதுவரை மொத்தமாக தமிழகம் முழுவதிலும் 1439 நபர்கள் கலந்து கொண்டு 914 கொடையாளர்கள் ரத்ததானம் வழங்கியுள்ளனர்.

சென்னை தலைமையகத்தில், தொடர்ந்து மழை பெய்து வந்தபோதிலும் தகுந்த முன்னேற்பாடுகளுடன் ரத்ததான முகாம் சிறப்பாக நடைபெற்றது. நமது வேண்டுகோளை ஏற்று ரத்ததான முகாமினை துவக்கி வைப்பதற்காக வருகை புரிந்த மதிப்புக்குரிய மேலாண்மை இயக்குநர் / மின் தொடரமைப்பு கழகம் அவர்கள் நமது சமுதாய நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் விதமாக தாமும் இரத்ததானம் வழங்கி முகாமினை துவக்கி வைத்தார்கள். அதை தொடர்ந்து, இயக்குநர் / உற்பத்தி, நிதி கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் தலைமை பொறியாளர் / திட்டமிடல் ஆகியோர்கள் நமது முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் வழங்கி சிறப்பித்துள்ளனர். இயக்குநர் / விநியோகம், இயக்குநர் / திட்டங்கள் மின் தொடரமைப்பு, இயக்குநர்/ திட்டங்கள் / TNPGCL, இயக்குநர் / நிதி / TNPDCL, இயக்குநர் நிதி/ TNGECL மற்றும் தலைமைப் பொறியாளர் (பொறுப்பு) / காஞ்சி, தலைமைப் பொறியாளர்/ DRIP, தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு ஆகியோரும், சகோதரத் தொழிற்சங்கங்களின் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு நமது சமுதாயப் பணிகளை அங்கீகரித்துள்ளனர்.

அரசு மருத்துவமனைகளில் ஏழை நோயாளிகள் பயன் பெறும் வகையில் பொறியாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற 9வது ஆண்டு ரத்ததான முகங்களில் கலந்து கொண்டு, ரத்த தானம் செய்த அனைத்து கொடையாளர்களுக்கும் சிறப்பான முறையில் முகாமினை ஏற்பாடு செய்த அனைத்து பொறுப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

முகாமினை காணும் அனைவரின் நெஞ்சங்களிலும் தாமும் ரத்ததானம் வழங்கிட வேண்டும் என்ற உந்துதலையும் விழிப்புணர்வையும் பொறியாளர் சங்கம் ஏற்படுத்தியுள்ளது. இதுவே மறைந்த நமது பொறுப்பாளர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

கடந்த 27.11.2024 அன்று இயக்குநர் / விநியோகம் அவர்களை நேரில் சந்தித்து கீழ்காணும் கோரிக்கைகள் குறித்து உரிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது.

- ♣ இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுகளை தகுதியுடைய அனைவருக்கும் உடனடியாக வழங்கிட
- ♣ கணக்கீட்டு பணிகளில் தொழில் பழகுநர்கள் (apprentice) ஈடுபடுத்தப்படுவதை உடனடியாக நிறுத்திட
- ♣ திருவெண்ணைநல்லூர் கோட்டத்தில் மீட்டர் / பண்டக சாலை பிரச்சனைகளை உடனடியாக சீர் செய்திட.
- ♣ ஒப்பந்த ஊர்திகளின் உச்சவரம்பினை உயர்த்துதல்
- ♣ விநியோக மின்மாற்றிகளுக்கான எண்ணெய் வழங்கிட
- ♣ ஊரகப்பகுதிகளில் K2 ஒப்பந்ததாரர்கள் தொடர்பான பிரச்சனைகளை களைதல்

மேலும் அன்றைய தினம் 27.11.2024 இயக்குநர் / இயக்கம் அவர்களை சந்தித்து புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயக்கத்திலுள்ள துணை மின் நிலையங்களுக்கான இயக்குனர் (Operator) புதிய பணியிடங்களை (New post Sanction) உடனடியாக அனுமதித்திடவும், கோப்பினை விரைந்து பரிசீலனை செய்திடவும், அவ்வாறு பணியிட அனுமதி நிலுவையிலுள்ள துணைமின் நிலையங்களையும் கருத்தில் கொண்டு இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுகளை தற்போது காலியாக உள்ள அனைத்து பணியிடங்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதுகுறித்து தலைமை பொறியாளர் / பணியமைப்பு அவர்களிடமும் உரிய முறையீடு செய்யப்பட்டது. மேலும் நிலுவையிலுள்ள உள்முகத்தேர்வு (TA/ Elec, JE Gr II / Civil, AE/ Elec, Mech, Civil) மற்றும் இளநிலைப் பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுகள், உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுகள் உடனடியாக வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

நமது பொறியாளர் சங்கத்தின் தொடர் முறையீடுகளின் பயனாக 28.11.2024 அன்று இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வு, 750 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும், 250 பட்டயமல்லா பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நமது வேண்டுகோளினை ஏற்று, அதிக எண்ணிக்கையிலான பதவி உயர்வுகளை வழங்கிட்ட தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கும், வாரிய இயக்குநர்களுக்கும், பணியமைப்பு நிர்வாகத்திற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பதவி உயர்வு கிடைக்கப் பெற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களை 28.11.2024, 04.12.2024, 11.12.2024, 23.12.2024 ஆகிய தினங்களில் சந்தித்து நிலுவையிலுள்ள பதவி உயர்வுகள், உள்முகத்தேர்வுகள் மற்றும் பதவி உயர்வுகளுக்கு தடையாகவுள்ள நீதிமன்ற வழக்குகளை விரைவுப்படுத்திட நடவடிக்கைகள் ஆகியவைகள் குறித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

வாரியத்தலைவர் அவர்களை 23.12.2024 அன்று சந்தித்து

1. வட்டங்களுக்கு குறைந்தது ஒரு கனரக வாகனம் (Lorry) புதிதாக வழங்கப்படுவதன் அவசியத்தையும், நிதி பற்றாக்குறையை காரணம் காட்டி வாகனம் சம்பந்தமான கோப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டி, வாகனம் சம்பந்தமான கோப்புகளுக்கு உடனடியாக அனுமதியளித்திட நடவடிக்கை மேற்கொள்வது.
2. FOC, Spl Mtce / MRT/ P&C / Lines மற்றும் இதர அலுவலகங்களுக்கான ஒப்பந்த வாகனங்களின் தின வாடகை மற்றும் ஒப்பந்த தொகையினை உயர்த்தி வழங்க வேண்டி நடவடிக்கை மேற்கொள்வது.
3. புதிதாக நிர்மாணிக்கப்பட்டு புதிய பணியிடங்கள் அனுமதி நிலுவையிலிருக்கும், இயக்கத்திலுள்ள அனைத்து துணை மின்நிலையங்களுக்கும் பதவி (Operator) உள்ளிட்ட அனைத்து பதவிகளுக்கும் உடனடியாக பணியிட அனுமதி வழங்குவது.
4. நிலுவையிலுள்ள உள்முகத் தேர்வு TA/ Ele, JE Gr II / Civil, AE/ Ele, Mech, Civil மற்றும் உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுகள் உடனடியாக வழங்கிடுவது ஆகியவைகள் குறித்து விவாதித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

- ♣ 23.12.2024 அன்று மேலாண்மை இயக்குனர் / மின் தொடரமைப்புக் கழகம் அவர்களைச் சந்தித்து புதிய துணை மின் நிலையங்களுக்கு புதிய பதவி அனுமதிகளை உடனடியாக வழங்கிட
- ♣ தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத் தேர்வு பதவி உயர்வினை விரைந்து வழங்கிடவும், மின் தொடரமைப்பு கழக துணைமின்நிலையங்களுக்கான TA பதவிகளுக்கு முன்னுரிமை வழங்கி நிரப்பிடவும்.
- ♣ MRT, P&C, Lines பிரிவுகளின் பணிகளை வரன்முறை செய்திடவும் வலியுறுத்தி முறையீடு செய்யப்பட்டது.

நிலுவையிலுள்ள அனைத்து பதவிஉயர்வுகள் குறித்து வாரியத் தலைவர் அவர்களை 09.12.2024, 16.12.2024, 23.12.2024 ஆகிய தேதிகளும், இயக்குநர் விநியோகம் அவர்களை 27.11.2024, 19.12.2024 ஆகிய தேதிகளும் தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்களை 27.11.2024, 28.11.2024, 04.12.2024, 11.12.2024, 23.12.2024 ஆகிய தேதிகளிலும் நேரில் சந்தித்து தொடர் முறையீடுகள் அளிக்கப்பட்டுள்ளது.

இளநிலைப் பொறியாளர் / முதல் நிலை இயந்திரவியல் பதவி உயர்வுக்கான நீதிமன்ற வழக்கினை விரைந்து விசாரித்திட வேண்டி நமது வழக்கறிஞர் மூலமாக நீதிமன்ற பதிவாளர்களுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

உதவிப் பொறியாளர் / உள்முகத் தேர்வு சம்பந்தமாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தனி நபர்களால் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்குகளில் சங்கம் தன்னையும் இணைத்துக்கொண்டு இடைக்கால தடை ஏதும் வழங்காமல் காத்து வந்து நிலையில், தற்போது வாரிய பணியில் இல்லாத சில வெளி நபர்கள் மூலம் மதுரை உச்ச நீதிமன்ற கிளையில் இளநிலைப் பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வு மற்றும் உதவிப் பொறியாளர் / உள்முகத் தேர்வு ஆகியவற்றிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, இளநிலைப் பொறியாளர் / மின்னியல் முதல் நிலை பதவி உயர்வுக்கு மட்டும் இடைக்கால தடை உத்தரவினையும் பெற்றுள்ளனர்.

இளநிலைப் பொறியாளர் முதல் நிலை / மின்னியல் பதவி உயர்வு வழக்குகளில் நம்மைச் சுற்றிலும் நாலாபுறமும் எதிரிகள் வழக்கு தொடர்ந்தாலும், பொறியாளர் சங்கம் அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து, மிகுந்த எண்ணிக்கையிலேயே பதவி உயர்வுகளை சங்க உறுப்பினர்களுக்கு பெற்றுத் தந்துள்ளது என்பதே வரலாறு. தற்போதும் தடைகளைத் தகர்த்து, பதவி உயர்வுகளை பெற்றுத்தர அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல், உதவி பொறியாளர் / மின்னியல், இயந்திரவியல், சிவில் இளநிலைப் பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை ஆகிய உள்முகத்தேர்வு நடவடிக்கைகள் இறுதி வடிவம் பெற்றுள்ளது. இம்மாதம் இறுதிக்குள் பதவி உயர்வு உத்தரவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில மின்வாரியங்களை தனியார்மயமாக்கிட துடிக்கும் மத்திய அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளின் அடுத்த பரிமாணமாக, உத்தரபிரதேசம் மற்றும் சண்டிகர் மின்சார வாரியங்களை (பகிர்மானம் கழகங்களை) தனியார் மயமாக்கும் நோக்கில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன. இதனை வலிமையாக எதிர்த்து, உத்தரப்பிரதேச மின்வாரிய தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள் தொடர் போராட்டங்களும், வேலைநிறுத்தம் உள்ளிட்ட உச்சகட்ட போராட்டங்களிலும் குடும்பத்தினரோடு ஈடுபட்டு தங்களின் வலுவான எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றன. இந்த நிலையில் உத்தரப்பிரதேசத்தை ஆளும் அரசும் தொடர்ந்து பணிநீக்கம், தொழிற்சங்க தலைவர்கள் கைது உள்ளிட்ட அடக்குமுறைகளை கையாண்டு வருகிறது. தனியார்மய நடவடிக்கைகளை முறியடித்திட போராட்டங்களில் ஈடுபட்டுள்ள உத்தரப்பிரதேசம் மற்றும் சண்டிகர் மின்வாரிய பணியாளர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் ஒருமித்த ஆதரவளிக்கும் வகையில் நாடு முழுவதும் டிசம்பர் 6 அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டங்களை நடத்திட தேசிய மின்சார தொழிலாளர் மற்றும் பொறியாளர் கூட்டமைப்புகள் கட்டமைப்பின் சார்பில் (NCCOEEE) முடிவெடுக்கப்பட்டது.

தமிழகத்தில் டிசம்பர் 6 தேதிகளில் பெரும் கனமழை மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்றுவந்தமையில், டிசம்பர் 10 அன்று அனைத்து தொழிற்சங்கள் சார்பாக (NCCOEEE) தமிழகம் முழுவதும் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போராடும் உத்தரப்பிரதேசம் மற்றும் சண்டிகர் மின்வாரிய பணியாளர்களுக்கு தோளோடு தோள் கொடுப்போம்.

நீண்ட இடைவேளைக்குப் பின், காலத்தின் அவசியம் கருதி, மின்சார வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் மீண்டும் 17.12.2024 அன்று சென்னை தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் கலந்துகொண்டு, முத்தரப்பு ஒப்பந்த சரத்துகளில் திருத்தம், வேலைப்பளு ஒப்பந்த பேச்சு வார்த்தையினை உடனடியாக துவக்கிடுதல், உள்ளிட்ட பிரதான கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

22.12.2024 அன்று திருச்சியில் நமது சங்கத்தின் செயற்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் வாரியத்தின் தற்போதைய நிலை, மின்வாரியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்கள், சங்கம் மேற்கொண்டு வரும் / மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், கிளைகளின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் மற்றும் குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்/பொதுச் செயலாளர்

## Our Representations

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL, Chennai-600 002.

**Lr.No.GS/TNEBES/F1/D.12/ 2024, Dt. 09.12.2024**

Respected Sir,

**Sub:** Processing of Junior Engineer / Electrical I Grade Promotions – Requested - Regarding.

**Ref:** Letter No. 042144IG3/G31/2024-3, dated: 09.10.2024.

Vide reference cited above suitability report was called for promotion to the post of Junior Engineer / Electrical I Grade Promotions among eligible individuals. Particulars have been received from the field and consolidation is in process.

Since huge number of vacancies exists in the field, the said promotions may be processed and orders issued at the earliest which would be very much beneficial to the Board.

The intervention of the Respected Chairman cum Managing Director is solicited in this matter requesting to instruct the Chief Engineer / Personnel to process the Junior Engineer / Electrical I Grade promotion and issue orders at the earliest please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S.SAMPATH KUMAR)**
General Secretary.

---

**Lr.No.GS/TNEBES/F1/D.13 / 2024, Dt. 09.12.2024.**

Respected Sir,

**Sub:** Releasing of Technical Assistant / Electrical Promotions by Internal Selection– Requested - Regarding.

**Ref:** Letter No.32194/G.19/G.191/2023-1, dated: 12.12.2023.

Based on the persistent representations of our Sangam, applications were invited from eligible individuals for promotions to the post of Technical Assistant / Electrical by Internal Selection vide reference cited above.

Numerous applications received from the individuals has been consolidated, processed and ready for issuing of promotions.

Huge number of vacancies exists in Technical Assistant / Electrical posts affecting the day to day works of the Board in Distribution, Generation, Substations and other areas. Releasing of these promotions will be highly beneficial to the Board.

Hence we kindly request the intervention of the Respected Chairman cum Managing Directorin this matter, to instruct the Chief Engineer / Personnel to issue Technical Assistant / Electrical promotion orders by Internal Selection to all eligible candidates at the earliest please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S.SAMPATH KUMAR)**
General Secretary.

---

**Lr.No.GS/TNEBES/F1/D.14 / 2024, Dt. 09.12.2024.**

Respected Sir,

**Sub:** Issuing of Assistant Executive Engineer / Electrical Promotions at the earliest – Requested - Regarding.

**Ref:** Letter No. 071098/G1/G11/2023, dated: 08.02.2024.

Vide reference cited above suitability report for promotion to the post of Assistant Executive Engineer was called among eligible individuals.

The promotions has been processed and DPC has been completed. Approval of Panel and issuing of promotions is kept pending for want of legal clearance. We learnt that the Madurai bench of Chennai high court dismissed the case today.

Since, there is no legal constraint, the promotion process may be expedited and orders issued at the earliest since the individuals are anxiously awaiting for quite long, for which we request the intervention of the Respected Chairman cum Managing Director to instruct the officials concerned in this regard and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S.SAMPATH KUMAR)**
General Secretary.

BOARD ORDERS

# 1000 பேர் இளநிலை பொறியாளர் 2ம் நிலை பதவி உயர்வு

*"A Jumbo Panel"*

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**(Erstwhile TANGEDCO) Administrative Branch**

144, Anna Salai, Chennai-600 002

**Memo.No.027722/G4/G41/2024-7, Dated. 28.11.2024**

**Sub:** Establishment - Class III service Technical Assistant/Electrical (Diploma Holders) Promotion to the post of Junior Engineer (Electrical) II Grade Allotment orders -Issued.

**Ref:** This office Memo. No. 027722/G4/G42/2024-6, dated 28.11.2024.

1. The 749 Technical Assistants/Electrical and one Senior Draughtsman mentioned in the Annexure who have been selected for promotion to the post of Junior Engineer/Electrical II Grade under 92 & 94 of TNEB Service Regulation are allotted to the Circles noted against their names.
2. The concerned Superintending Engineers are requested to issue necessary appointment cum posting orders on promotion to the individuals subject to the following instructions:.
   i. The allotment orders need not be served to the individuals if they are involved in Disciplinary Proceedings/Undergoing Punishment/ Vigilance remarks and the work and conduct is not satisfactory and to return the same with details.
   ii. To invite to this office instructions issued in the Memo. No.100855/515/G.42/G.423/2002.1, dated 30.08.2002 and adhere the same strictly.
   iii. The pay shall be fixed as per 33 (b) of TNEB Service Regulation.
   iv. The promotee should join at the posted place within 15 days from the date of relief and request for modification of postings will not be entertained.
   v. To report the date of joining of the Promotee.
   vi. If the Promotee fails to join duty at the posted place within 15 days on relief from the present station, promotion orders will be cancelled.
   vii. To relieve the promotee within 15 days from the date of issue of posting orders without waiting for joining of substitute as instructed in letter No.113304/F1/A1/93.1, dated 22.11.1993.

**M.SUDARSAN**
**CHIEF ENGINEER/PERSONNEL**

| Sl.No. | Employee ID | Name | DOB | Present Circle | Alloted Circle |
|---|---|---|---|---|---|
| 1 | 12079834 | Rajkumar.A | 30.07.1977 | Tirunelveli EDC | Kanyakumari EDC |
| 2 | 12063017 | Mohan kumar.A | 12.11.1990 | Erode EDC | Erode EDC |
| 750 | 12045405 | Beer Mohamed.S (D'man) | 15.04.1984 | Pudukottai EDC | Dindigul EDC |

## NON-DIPLOMA (250 NOS)

**Memo. No.065240/G.4/G42/2024, Dated 28.11.2024**

**Sub:** Establishment - Class III Service - Appointment as JE / Electrical II Grade, by transfer method from Non-Diploma Holders - Allotment - Orders - Issued.

# மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் 8-ம் ஆண்டின் நினைவாக கிளைகளில் நடைபெற்ற இரத்ததான முகாம்கள்.



NCTPS


Salem



Theni


Thirupathur


Udumalpet


Virudhunagar


Dharmapuri


Nilgris


Vellore


Thiruvannamalai


Sivagangai



Tirunelveli



Tuticorin


Thiruvarur

# மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் 8-ம் ஆண்டின் நினைவாக கிளைகளில் நடைபெற்ற இரத்ததான முகாம்கள்.



Chengalpet



Cuddalore



Erode



Gobi



Kallakurichi



Kanyakumari



Madurai



Namakkal



Perambalur



TTPS

# 12.12.2024 அன்று சென்னை தலைமையகத்தில் நடைபெற்ற















# இரத்ததான முகாமிற்கு வருகைதந்த மின்வாரிய அதிகாரிகள்


















## மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் 8-ம் ஆண்டின் நினைவாக கிளைகளில் நடைபெற்ற இரத்ததான முகாம்கள்.



Thanjavur



Thanjavur



Thanjavur



Trichy



Trichy



Pudukottai

**மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் 8-ம் ஆண்டின் நினைவாக கிளைகளில் நடைபெற்ற இரத்ததான முகாம்கள்.**














## இரத்ததானம் செய்த அனைத்து கொடையாளர்களுக்கும் சிறப்பான முறையில் முகாமினை ஏற்பாடு செய்த அனைத்து பொறுப்பாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்

# மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் 8 ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்ற இரத்ததான முகாமில் கலந்துக்கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள்














**ANNUXURE-I**

**Memo.No.027722/G4/G41/2024-7, Dated. 28.11.2024**

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LTD (TNPDCL)**

**ABSTRACT**

Establishment - TNPDCL Class I & II Service - Scrutinization of the pay anomaly and pay re-fixation proposals - Constitution of a Committee - Orders - Issued.

**SECRETARIAT BRANCH**

Dated 6th December 2024.
Karthigai-21. Thiruvalluvar Aandu 2055.

**Read:**

(Per.) CMD TNPDCL Proceedings No.52
1. Board's Memo. No. 027939-C1/88-1, (SB) dated 08.05.1988.
2. B.P.Ms. (Ch) No.162 (SB) dated 10.06.1988.
3. (Per) B.P (Ch) No.119 (SB) dated 18.05.1993.
4. Board's Memo. No.30229/A4/A41/2018-1, dated 23.05.2018.
5. Board's Memo. No.56545/A4/A41/2019-1, dated 22.01.2020.

**PROCEEDINGS:-**

1. In the Board's Memorandum first read above, the conditions for rectification of pay anomaly and the circumstances where the pay anomaly could not be rectified have been prescribed. In the reference second read above, earlier a Pay anomaly committee was constituted to study the case of rectification of pay anomaly dealt with at the Head quarters level and subsequently as per the Board's Proceedings third read above the said committee was abolished and the Competent Authorities to order for rectification of pay anomaly were also prescribed from Class I to Class IV Officials/Employees,
2. In the Board's Memorandum fourth read above, instructions were issued for submission of the pay anomaly proposals by the Officers/Employees including the retired persons in a complete shape with required particulars, since the pay anomaly proposals were received from the field offices without proper scrutinisation and with relevant particulars. Further, in the Board's Memorandum fifth read above, instructions were issued to furnish the pay anomaly proposals in a new format with individual application and comparative statement as prescribed by the Government, so as to verify the correctness of the pay particulars.
3. Of late, it is observed that pay anomaly is being claimed by the Officers/Employees for 10 to 15 years back period, even by the retired officials, since there is no time limit prescribed for claiming pay anomaly and also it is observed that Thousands/Lakh of rupees are being claimed as arrears and paid to each individual, which involves additional financial commitment to the Corporation. In view of the involvement of huge financial commitment, it has been suggested to constitute a Committee comprising of the Members from the Accounts Branch, Secretariat Branch, Administrative Branch and Audit Branch to analyze the pay anomaly and pay re-fixation proposals in respect of Class I and II Officers submitted by the Secretariat Branch and to recommend to the Competent Authority for sanction and also to fix a timeline for submission of pay anomaly proposals. The suggestion has been accepted and approved by the Chairman and Managing Director/TNPDCL.
4. Accordingly, it is hereby ordered that a Committee be constituted comprising the following Members to analyse the Pay anomaly and pay re-fixation proposals in respect of Class I and II Officers of Tamil Nadu Power Distribution Corporation Limited, Tamil Nadu Power Generation Corporation Limited, Tamil Nadu Green Energy Corporation Limited and Tamil Nadu Transmission Corporation Limited and to recommend to the Competent Authority for consideration :-
    1. Financial Controller/Cost/Accounts Branch.
    2. Deputy Secretary/Personnel/Secretariat Branch.
    3. Senior Deputy Chief Internal Audit Officer/Pension/Audit Branch.
    4. Senior Personnel Officer/Recruitment/Administrative Branch.

The Under Secretary/Wage Revision & Regulations, Secretariat Branch shall be the convener of the committee. The committee meeting shall be convened once in a week on the date convenient to the Members of the Committee, so as to analyze the proposals on an ongoing basis. The recommendation of the Committee will be placed before the Competent Authority concerned for approval. The Committee shall also study and recommend a time line for submission of pay anomaly proposals by the Officers/Employees.

**K.NANTHAKUMAR**
CHAIRMAN AND MANAGING DIRECTOR

**தலையை நுழைத்தது ஒட்டகம் !**

ஆங்கிலேயர் கைகளில் இருந்த போது நம் நாட்டின் அனைத்து வளங்களும் பறிபோன பின் 1947–ல் சுதந்திரம் அடைந்தது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது உடனடி அவசியமானது. அதனால் அதற்கு உடனடியாக நாட்டில் பசுமைப் புரட்சி மற்றும் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்க வேண்டும் அதற்கு ஏழை எளிய மக்கள் உட்பட எல்லோருக்கும் குறைந்த விலையில் மின்சாரம் வழங்க வேண்டும், தொழிற்சாலைகள் பெருக வேண்டும், அதற்கு மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று உணர்ந்த அன்றைய இந்திய அரசு, மின்சார வாரியங்களை பொதுத்துறை நிறுவனங்களாக உருவாக்கியது.

அதற்கு முன்னர் பல்வேறு தனியார் கம்பெனிகளாக குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் மின் உற்பத்தி செய்து விநியோகம் செய்து வந்த தனியார் கம்பெனிகள் ஒருங்கிணைக்கப்பட்டு மின் வாரியங்கள் பொதுத்துறை நிறுவனங்களாக அந்தந்த மாநிலங்களின் உருவாக்கப்பட்டன.

நினைத்தது போலவே நாட்டில் மின்சார வாரியங்கள் மிகச் சிறப்பாக தன் சேவையை செய்தன. பொதுத்துறை நிறுவனங்களாக ஏழை எளியவர்க்கும் குறைந்த விலையில் மின்சாரம் அளித்ததும், இலவச மின்சாரம் வழங்கியதும் இலாப நோக்கில்லாமல் சேவை நோக்கோடு மக்கள் பணி செய்தும் வந்தன.

இப்படி பல்வேறு சாதனைகளை செய்த மின் வாரியங்கள் சேவை நோக்கோடு இலாப நோக்கம் இன்றி செயல்பட்டதால் நட்டத்தில் இயங்குவதாக காரணம் சொல்லி மத்திய அரசு அதனை ஈடுகட்டாமல் தனியார் மயம் ஆக்கும் நோக்குடன் மின்சார சட்டம் 2003–ஐ கொண்டு வந்து மாநிலத்தில் ஒழுங்கு முறை ஆணையம் அமைத்து மின் வாரியங்களை கழகங்களாக மாற்றின.

தமிழ்நாடு மின்சார வாரியம் மின் விநியோக சட்டம் 1948–ன் படி பொதுத்துறை நிறுவனமாக கடந்த 1.7.1957 முதல் செயல்பட்டு வந்தது. மின்சார சட்டம் 2003–ன் படி கடந்த 1.11.2010 முதல் கழகமாக மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. இப்போது இது ஐந்து நிறுவனங்களாக பிரிக்கப்பட்டு (அரசு நிறுவனங்களாக) செயல்பட்டு வருகிறது.

ஆனால் பெரும்பாலான மாநிலங்களில் குறிப்பாக வட மாநிலங்களில் மின் விநியோக நிறுவனங்கள் மேலும் பிரிக்கபட்டு (REBUNDLING) பல மின் விநியோக கம்பெனிகள் உருவாக்கப்பட்டு அவற்றில் சில அரசு நிறுவனங்களாகவும், சில தனியார் நிறுவனங்களாகவும் செயல்படுகின்றன.

தனியார் துறையில் உள்ள மின் விநியோக நிறுவனங்கள் பேரிடர் மற்றும் அவசர காலங்களில் சேவை நோக்கோடு பணியாற்றவில்லை என்பதை நாடு உணர்ந்தும் மின்சாரம் தனியார் மயமாக்கல் தொடர்கிறது. இந்த தனியார் மயத்தை மேலும் எளிதாக்க மின்சார சட்ட திருத்த மசோதாவை இந்திய அரசு கொண்டுவந்தது. அதற்கு, நாம் அங்கம் வகிக்கும் AIFOPDE, அது சார்ந்துள்ள NCCOEEE அமைப்புகள் நாடு முழுவதும் தொடர் போராட்டங்களை நடத்தியதன் விளைவாக அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் தற்போது உத்தரபிரதேச அரசு அங்கு அரசு மின் விநியோக நிறுவனங்களாக உள்ள வாரணாசி மற்றும் ஆக்ரா மின் விநியோக நிறுவனங்களை (சுமார் 52 மாவட்டங்கள், மீரட் உள்ளிட்ட ஐந்து பெரிய நகரங்கள் இதில் அடங்கும்) தனியார் வசம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. இதற்கு ஒடிசா மாடல் 50:50 பங்குதாரர் (PARTNERSHIP) என்று பெயர். அதாவது அரசும், தனியாரும் சரிவிகித பங்குதாரராக இருப்பர். தலைவராக (CHAIRMAN) அரசு நியமிக்கும் IAS அதிகாரியும், மேலாண்மை இயக்குனராக (MD) தனியார் நிறுவனம் நியமிக்கும் முடிவுகளை பெரும்பாலும் தனியார் நிறுவன மேலாண்மை இயக்குனரே எடுப்பார். இந்த மாடல் வெற்றி பெற்றால் உத்தரபிரதேசம் முழுவதும் விரிவுப்படுத்தப்படும்.

சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் அங்குள்ள மின் துறையை (ELECTRICITY DEPARTMENT) முழுவதுமாக கொல்கத்தா கம்பெனிக்கு கொடுக்க முடிவு செய்துள்ளது.

இது இந்த இரண்டு மாநிலங்களில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான மின் துறை பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பணி நிலையினை கேள்விக் குறியாக்கியுள்ளது. அதன் காரணமாக கடந்த இரண்டு மாத காலமாக அந்த இரண்டு மாநிலங்களில்

பணியாற்றும் மின் பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள் கடும் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். NCCOEEE முடிவின் படி நாடு தழுவிய போராட்டங்களும், ஆர்பாட்டங்களும் நடைபெற்று வருகின்றன. ஆனாலும் அரசுகள் செவி சாய்ப்பதாக இல்லை. நீதிமன்றம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட தடைவிதித்துள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் உத்தர பிரதேசம், சண்டிகர் மின்வாரிய தொழிலாளர்கள் போராட்டதிற்கு ஆதரவாக கடந்த 10.12.24 அன்று தமிழகம் முழுவதும் ஆர்பாட்டங்கள் நடைபெற்றது. அடுத்த கட்ட நகர்வு நோக்கி தொழிற்சங்கங்கள் ஆலோசித்து வருகின்றன.

தனியார்மயம் எனும் ஒட்டகம் மின் துறை கூடாரத்தில் நுழைந்து விட்டது, அது இனி மெல்ல மெல்ல அனைத்தையும் ஆக்கிரமிக்க முயலும். ஒன்றுபட்ட போராட்டமும், நமது விழிப்புணர்வும் மட்டுமே மயத்தனை தடுத்திடவும் பொதுத்துறையை பாதுகாத்திடவும் வழிவகுக்கும். நமது எதிர்காலம் நமது கையில்.

**முனைவர் சா.சம்பத்**
மாநில அமைப்பு செயலாளர் தென் மண்டல தலைவர்/AIFOPDE

## Power Engineers, Employees Stage Nation wide protest against power privatisation

Thousands of power sector employees and engineers under the banner of the National Coordination Committee of Electricity Employees and Engineers held protest meetings, seeking scrapping of the process to privatise two Discoms in Uttar Pradesh and handing over Chandigarh electricity department to a private company.

The protest rallies were held at Jammu and Kashmir, Himachal Pradesh, Madhya Pradesh, Telangana, Hyderabad and other states at all projects and Discoms headquarters.

In Shimla the joint front of engineers and employees was held at Kumar House and addressed by Lokesh LThakur and Hira Lal Verma . They said that by privatisation the service conditions of employees will deteriorate and consumers will bear higher tariffs. Even the Himachal government is proceeding towards privatisation and front opposes it.

In Chandigarh protest rally was held in sector 17 and was addressed by Padamjit Singh Chief Patron AIPEF, Subhash Lamba General secretary EEFI , Gopal Joshi and others. The assets of the electricity department are being sent to private party at throw away prices. In the case of Chandigarh privatisation proposal, there is 100 per cent sale of the electricity department, then where will be the competition.

The government is simply privatising the power sector at the cost of the state sector in the name of reforms. The last three decades of marketoriented power sector reforms have exposed the inefficiency of the central government's reform programme.

The present set of reforms is nothing but a desperate attempt by the government to cover up the policy miscalculations of the past decades, while simultaneously protecting the interests of private power generators at the cost of state distribution companies.

In Uttar Pradesh , the ESMA has been imposed and employees have been warned not to go on strike. Emergency situations have been created in Uttar Pradesh by banning strike, demonstration and employees gatherings. UP employees will hold protest meetings at all district headquarters tomorrow.


<u>**வாழ்த்துக்கள்**</u>



**பொறியாளர் சங்க உறுப்பினர்கள்**
**அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு,**
**பொங்கல் மற்றும் குடியரசு தின**
**நல்வாழ்த்துகளை**
**பொறியாளர் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது**



## UT INVOKES ESMA AS POWER STAFF OPPOSE PRIVATIZATION

Will fight till last breath, say members of UT powermen union

TRIBUNE NEWS SERVICE
CHANDIGARH, DECEMBER 6

The UT Administration has invoked the East Punjab Essential Services (Maintenance) Act (ESMA), 1947, prohibiting strike by employees of the Electricity Department. The employees have been protesting the privatisation of the Electricity Department.

According to the orders issued by UT Adviser Rajeev Verma, the UT Administrator agrees that any strike by employees of the department will affect the generation and maintenance of electricity supply, which is an essential service to society.

Further, the prohibition of strike by the employees is in public interest. The orders prohibit strike by employees for a period of six months with immediate effect.

The administrator has authorised the UT Chief Engineer and Superintending Engineer (Electricity) to make a complaint in writing against any person defying the provisions of the Act.

Secretary of the union, said the electricity employees would fight against privatisation till their last breath. Union president Dhyan Singh said their protest couldn't be weakened by implementing ESMA. He also expressed happiness over the immense support received from employees of all states, including Haryana, Punjab, Himachal Pradesh and Jammu and Kashmir, and staff of other departments. He said the administration was making statements about the service condi tions of the employees but was not ready to talk seriously.

Addressing the protesters, a senior member of National Coordination Committee of Electricity Employees and Engineers, Subhash Lamba said on a call of the committee. protests were organised today across the country against the privatisation of Chandigarh and UP electricity departments.

He said giving a government department, which earned crores of rupees in profit each year, in private hands was illogical. He said the department's assets were being handed over to a private company for just Rs. 871 crore.

National secretary of Electricity Employees Federation of India Sudeep Dutta said 27 lakh electricity employees and engineers of the whole country were standing with the employees of Chandigarh and UP. He said "National Anti-Privatisation Day" would be observed on December 13, during which power employees would protest across the country.

The UT Powermen Union had given a call for a three- day strike from February 22 to 24 in 2022. There was a blackout in the city for nearly 40 hours. The Administration had invoked the East Punjab Essential Services (Mainte nance) Act (ESMA).

### கண்ணா இது புதுசு.... போர்கால சீரமைப்பு பணியில் ட்ரோன்...

கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் சங்கராபுரம் கோட்டத்தில் மூங்கில் துறைப்பட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது.

மேற்படி சக்கரை ஆலைக்கு உயர் அழுத்த மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது இதற்கான மின்சாரம் திருவண்ணாமலை மேற்கு கோட்டம் வானப்புரம் பிரிவுக்கு உட்பட்ட கொட்டையூர் 33/11 கி.வோ மின் நிலையத்தில் இருந்து செல்கிறது

இந்த மின் பாதையானது 200 மீட்டர் அகலம் உள்ள தென்பெண்ணை ஆற்றைக் கடந்து செல்கிறது. கடந்த பென்ஜான் புயலின் போது ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஆற்றின் இரு கரையிலும் உள்ள இரண்டு 11கி.வோ பீடர் கம்பங்கள் மண் அரிப்பால் சாய்ந்து உடைந்து விட்டது.

இதனால் சக்கரை ஆலைக்கு மின் வினியோக பாதிப்பு ஏற்பட்டது இரண்டு நாட்களுக்கு பின் வெள்ளம் சற்று வடிந்த பிறகு இரண்டு கம்பங்கள் புதிதாக அமைத்து ஆற்றின் இக்கரையில் இருந்து அக்கரைக்கு ட்ரோன் மூலம் மனிலா கயிர் அனுப்பி அதில் மின் கம்பிகளை கட்டி இழுத்து மின் பாதைகள் அமைக்கப்பட்டது மேற்கண்ட பணிகளை வானப்புரம் பிரிவு அலுவலர் பொறியாளர் A.ஸ்ரீனிவாசன் இளநிலை பொறியாளர் நமது சங்க கிளையின் அமைப்புச் செயலாளர் அவர்கள் பிரிவு பணியாளர்களுடன் பாதுகாப்பாக செய்துள்ளார். பாராட்டுக்கள்

# BRANCH DISCUSSION

**17.12.2024 TNEBES / Kallakurichi branch had a Scheduled discussion with Superintending Engineer/KEDC/Kallakurichi.**

10 Points were discussed in the above discussion.

**Management side:** 1.Superintending Engineer 2.Executive Engineer / General 3.Executive Engineer / MRT 4. Assistant Executive Engineer / Genl. 5.Acct. Supervisor

**Sangam side:** 1.Er.A.Ezhilarasan / President 2.Er.M.Rangasamy / Secretary 3.Er.S.Pandurangan / Treasurer 4.Er.R.Kirubakaran / Vice president

Long live Sangam. Er. M.Rangasamy Br.Sec, / Kallakurichi

**29.11.2024 Sangam had a Sheduled discussion with Superintending Engineer / Tiruvarur**

10 Points were discussed in detail.

**Management side :** 1. Superintending Engineer 2. Executive Engineer / General 3. Administrative officer 4. Assistant Executive Engineer MM 5. System Manager

**Sangam side :** 1. Er.S. Rajendran President 2. Dr. S. Sambath Branch secretary 3. Er. P. Dharbaranyam Branch Treasurer 4. Er. K. Kannan joint secretary

Dr. S. Sambath Br.Sec. / Tiruvarur

**06.12.2024, SANGAM had a Scheduled Discussion with Superintending Engineer / Thanjavur**

21 mentioned Issues and an additional 10 points were discussed during our discussion.

**Management side:** 1.The Superintending Engineer. 2.Exe. Engineer / Gen. 3.A.Adm Officer 4.AO (Accounts). 5.Assistant Executive Engineer / GL 6.Assistant Executive Engineer / MM 7.Manager (IS) and 8.Adm. I Supervisor

**Sangam side:**1.Er.G.Kumar Br. President, 2.Er.P.Sundar.GCM I, 3.Er.S.Panchanathan GCM II, 4.Er.S.Surendar Br. Treasurer and 5.Er.S.Ranjithkumar Div. Sec.

Er.K. Prabhakaran BS / TNEBES, Thanjavur

**On 12.12.2024, SANGAM had a Scheduled Discussion with Superintending Engineer / Virudhunagar**

14 Points were discussed in detail.

**Management side:** 1. Superintending Engineer 2. Executive Engineer / General 3. Administrative officer

**Sangam side:** 1. Er.A.Sivasubramaniyan / Br.Sec, 2. Er.B.Palanikumar/ GCM, 3. Er.J.Vadivel Pandian / Br. Treasurer

Er.A.Sivasubramaniyan / Br.Sec/ Virudhunagar

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்கண்ட பொறியாளர்கள் 30.11.2024 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. Er. S.MANIVANNAN, AEE / Development / Former Division Secretary / Thanjavur Branch. Phone: 9443249325
2. Er. S.RAMASAMY, AEE / Shift 230 KV GIS SS / Porur / Chennai South Branch. Phone : 8939266410

## VOLUNTARY RETIREMENT

Er. N.SATHIYAMOHAN, JE I / Kullanchavadi / SS / Cuddalore Branch. Phone : 89400 90955

# கண்ணீர் அஞ்சலி

## பொறியாளர்

1. 27.11.2024 பொர்.K.வெங்கடேஸ்வரன், உதவி செயற்பொறியாளர்/ இயக்கம் மற்றும் பராமரிப்பு பெத்தநாய்க்கன்பாளையம்/ சேலம் கிளை. 8870329643.

மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## பொறியாளர் குடும்பம்

1. 30.11.2024–பொர்.**R.பாலமுருகன்**, உதவி செயற்பொறியாளர்/ நகர் இராமநாதபுரம். ராமநாதபுரம் கிளை அவர்களின் **தந்தையார்.** 9445852662.
2. 02.12.2024 –பொர்.**K.அசோகன்**, உதவி செயற்பொறியாளர்/ இயக்கம் மற்றும் பராமரிப்பு சூரமங்கலம் / இராமநாதபுரம் கிளை அவர்களின் **தாயார்.** 9500205987.
3. 02.12.2024 – பொர்.**R.சுகந்தி**, உதவி பொறியாளர் / SCADA மற்றும் பொர்.**R.சுரேகா**, உதவி பொறியாளர் / க&மே / மேற்கு சேலம். சேலம் கிளை ஆகியோர்களின் **தந்தையார்.** 8610073031, 7639391163.
4. 03.12.2024– பொர்.**K.மலையரசன்**, உதவி செயற்பொறியாளர் (NI)/ Mech/ ETPS. ETPS கிளை அவர்களின் **தந்தையார்.** 9884146222.
5. 03.12.2024 – பொர்.**S.செந்தில் குமார்**, செயற்பொறியாளர் / MP/ MTPS-I. MTPS கிளை அவர்களின் **தந்தையார்.** 9789484947
6. 08.12.2024 – பொர்.**M.ஷண்முகம்**, தொழில் நுட்ப உதவியாளர் / O & AHS / MTPS–I. MTPS கிளை அவர்களின் **தாயார்.** 9443510277
7. 11.12.2024 – பொர்.**K.R.ரகு**, உதவி செயற்பொறியாளர் / முறைப்பணி / 230 கி.வோ. துணை மின்நிலையம் கடலங்குடி. நாகை கிளை அவர்களின் **தாயார்.** 7598479301.
8. 12.12.2024 – பொர்.**ஆம்ஸ்ட்ராங் சாமுவேல்**, இளநிலை பொறியாளர் / O & E-I / TTPS. TTPS கிளை அவர்களின் **மனைவியார்.** 9789719320.
9. 13.12.2024 – பொர்.**P.ஆறுமுகம்**, உதவி பொறியாளர் / E/ CAD / TTPS. TTPS கிளை அவர்களின் **தந்தையார்.** 9894849896.
10. 15.12.2024– பொர்.**S.ஜெகன்**, இளநிலை பொறியாளர் –II நிலை / அய்யனாபுரம் துணை மின்நிலையம் / தூத்துக்குடி. தூத்துக்குடி கிளை அவர்களின் **மனைவியார்.**
11. 17.12.2024 – பொர்.**M.மோகன்**, செயற்பொறியாளர் /Technical / O/o CE/ Distrn / Chennai North. சென்னை வடக்கு கிளை அவர்களின் **தாயார்.** 9842844434
12. 21.12.2024 – பொர்.**R.ரத்தினராஜா**, இளநிலை பொறியாளர் –II/ பேரளம் துணை மின்நிலையம். திருவாரூர் கிளை அவர்களின் **தாயார்.** 9791565032

ஆகியோர் இயற்கை எய்தினார்கள், குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.




மின் விநியோக நிறுவனங்களை தனியார் மயமாக்கலை எதிர்த்து போராடிவரும் சண்டிகர், உத்திரபிரதேச மின்வாரிய பணியாளர்களுக்கு ஆதரவாக 09.12.2024 அன்று சென்னையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது



22.12.2024 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் கலந்துக்கொண்ட செயற்குழு உறுப்பினர்கள்.

**MIN ALAI - December 2024 RNI No. TNBIL / 2012 / 47622**
**Printed Book Periodical**




சண்டிகரில் தனியார் மயமாக்கலை கண்டித்து மின் பணியாளர்கள் குடும்பத்துடன் போராட்டம்



உத்திரபிரதேசத்தில் மின்சார வாரியம் தனியார்மயமாக்கலை கைவிட சங்கத் தலைவர்கள் முறையீடு அளித்தது

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam